தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2021

ஆண்டு: 5 திகதி: 12/06/2021

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. பிரியதர்சினி பாஸ்கரதேவன்
செல்வி. க. விக்னேஸ்வரன்

மாணவர் பெயர்: ______________________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 20 | |
| வினா 7 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் பகுதியை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

## சுப்பிரமணிய பாரதியார்

சுப்பிரமணிய பாரதியார் அவர்கள், சின்னசாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக 1882 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் எட்டயபுரத்தில் பிறந்தார். இவர் இளம் வயதிலேயே தமிழில் புலமைப்பெற்றுத் திகழ்ந்தார்.

ஏழு வயதில் பள்ளியில் படித்துவரும்பொழுது கவிதைகள் எழுதத் தொடங்கினார். தன்னுடைய பதினொரு வயதில் கவிபாடும் ஆற்றலை வெளிப்படுத்தினார். இவருடைய கவிப்புலமையை பாராட்டிய எட்டயபுர மன்னர், இவருக்கு 'பாரதி' என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் இவர் 'சுப்பிரமணிய பாரதியார்' என அழைக்கப்பட்டார்.

பாரதியார் அவர்கள், 1897 ஆம் ஆண்டு செல்லம்மா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். தனது தந்தையின் இறப்புக்குப் பிறகு பாரதியார் வறுமை நிலையினை அடைந்தார். சிறிது காலம் காசிக்கு சென்று தங்கியிருந்தார். பிறகு எட்டையபுர மன்னரின் அழைப்பை ஏற்று அரசவை கவிஞராக பணியாற்றினார்.

இவர் சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகளிலும் தனி புலமைப்பெற்று விளங்கினார். 'கண்ணன்பாட்டு', 'குயில்பாட்டு', 'பாஞ்சாலி சபதம்', புதிய ஆத்திச்சூடி' போன்ற புகழ் பெற்ற காவியங்கள் பாரதியாரால் எழுதப் பெற்றன.

1921 ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி கோவிலுக்கு சென்றபோது, எதிர்பாராதவிதமாக அந்த கோவில் யானையால் தூக்கி எறியப்பட்டதால் பலத்த காயமுற்று மிகவும் நோய்வாய்ப்பட்டார். பிறகு, 1921 செப்டம்பர் 11ம் தேதி, தனது 39 ஆவது வயதில் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலைப் பெற்றார்.

1. சுப்பிரமணிய பாரதியாரின் தந்தையாரின் பெயர் என்ன?

______________________________________________

2. சுப்பிரமணிய பாரதியாரின் தாயாரின் பெயர் என்ன?

______________________________________________

3. பாரதியார் எத்தனையாம் ஆண்டு பிறந்தார்?

______________________________________________

4. பாரதியார் தமிழ் நாட்டின் எந்த ஊரில் பிறந்தார்?

______________________________________________

5. பாரதியார் எத்தனை வயதில் கவிபாடும் ஆற்றலை வெளிப்படுத்தினார்?

______________________________________________

6. எந்த மன்னர் 'பாரதியார்' என்ற பட்டத்தை வழங்கினார்?

______________________________________________

7. பாரதியார் எத்தனையாம் ஆண்டு செல்லம்மாவை திருமணம் செய்தார்?

______________________________________________

8. பாரதியார் புலமை பெற்றிருந்த இரண்டு மொழிகளை எழுதுக.

______________________________________________

9. பாரதியாரால் எழுதப்பெற்ற இரண்டு காவியங்களின் பெயர்களைத் தருக.

______________________________________________

______________________________________________

10. பாரதியாரின் இறப்பிற்க்கு காரணமாக அமைந்த சம்பவத்தைக் குறிப்பிடுக.

______________________________________________

______________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

1. **பின்வரும் வாக்கியங்களில் அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட சொல்லை பொருத்தமான வினைச்சொல்லாக மாற்றி எழுதுக.**

- கண்ணன் நேற்று (வா) :

  ______________________________

- அப்பா இன்று கடைக்கு (போ):

  ______________________________

- நானும் வாணியும் நாளை (விளையாடு):

  ______________________________

- தம்பி நேற்று படம் (வரை):

  ______________________________

- மாலா நாளை நடனம் (ஆடு) :

  ______________________________

(5 புள்ளிகள்)

2. **பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த சொற்களை எழுதுக.**

- சூரியன் : ______________________________
- மன்னன் : ______________________________
- கோயில் : ______________________________
- மலர் : ______________________________
- பாடசாலை : ______________________________

(5 புள்ளிகள்)

1. **பின்வரும் வசனங்களின் அடைப்புக்குள் உள்ள சொற்களில் சரியான சொல்லைத் தெரிந்து அடிக்கோடிடுக.**

- காட்டுத் தீயினால் பல மரங்கள் ________________ (அழிந்தன, அளிந்தன).
- எனது புத்தகத்தின் _______________ (உறை, உரை) அழகானது.
- புது வருட ________________ (வாண, வான) வேடிக்கையை மக்கள் பார்த்து மகிழ்ந்தனர்.
- கடல் நீரில் பல உப்புக்கள் _______________ (கரைந்து, கறைந்து) உள்ளன.
- மேகம் கறுத்து _______________ (மழை, மலை) பெய்தது.

(5 புள்ளிகள்)

2. **பின்வரும் சொற்களுக்குரிய பன்மைச் சொற்களை எழுதுக.**

- இளவரசர் : ________________________________________
- சிற்பம் : ________________________________________
- மதம் : ________________________________________
- விழா : ________________________________________
- மாநிலம் : ________________________________________

(5 புள்ளிகள்)

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

1. **தொடர்புபடுத்துக.**

- திருவள்ளுவர் - பாஞ்சாலி சபதம்
- கம்பர் - சிலப்பதிகாரம்
- இளங்கோ அடிகள் - திருக்குறள்
- பாரதியார் - கொன்றை வேந்தன்
- ஔவையார் - இராமாயணம்

(5 புள்ளிகள்)

2. **சேர்த்து எழுதுக.**

- ஏழு + பத்து : ______________________________
- பால் + குடம் : ______________________________
- வெள்ளை + கட்டி: ______________________________
- முள் + செடி : ______________________________
- கல் + பாறை : ______________________________

(5 புள்ளிகள்)

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

1. **பின்வரும் தொழில் காரணமாக அமையும் பெயர்களைத் தருக.**

- மரவேலை செய்பவர் :

  ______________________________

- உடைகளைத் தைப்பவர் :

  ______________________________

- வழக்குகளை விசாரிப்பவர் :

  ______________________________

- சிலை வடிப்பவர் :

  ______________________________

- ஆடுகளை மேய்ப்பவர் :

  ______________________________

(5 புள்ளிகள்)

2. **பின்வரும் இராமாயண கதாபாத்திரங்களின் பெயர்களை எழுதுக.**

- அயோத்தியின் மன்னன், இராமனின் தந்தை

  ______________________________

- சுமித்திரையின் மகன், இராமனுடன் வனவாசம் சென்றவன்

  ______________________________

- இலங்கை வேந்தன், சீதையை சிறை பிடித்தவன்

  ______________________________

- வானரப் படையைச் சேர்ந்தவன், சீதை இருக்கும் இடத்தை கண்டறிந்து இராமனுக்கு கூறியவன்

  ______________________________

- கைகேயியின் தோழி, இராமன் வனவாசம் செல்லக் காரணமானவள்

  ______________________________

(5 புள்ளிகள்)

- BLANK PAGE -

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

**உமது நண்பருக்கு, நீர் சென்ற விடுமுறையை விபரித்து கடிதம் ஒன்று எழுதுக.**

விடுமுறைக்கு நீர் சென்ற இடம், பார்த்து இரசித்த காட்சிகள், சுவைத்து மகிழ்ந்த உணவு வகைகள் பற்றிய உமது அனுபவத்தை கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.

- BLANK PAGE -

| வினா இல | 7 | புள்ளிகள் | 20 | பக்கம் | 11 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் ஒன்றைத் தெரிந்து 10 வசனங்கள் எழுதுக.**

- தமிழ் வளர்த்த பெரியார்
- அன்னையர் தினம்
- நான் வாசித்து மகிழ்ந்த கதை
- தமிழர் பண்டிகை